வலயக்கல்வி அலுவலகம் - வடமராட்சி

மூன்றாம் தவணைப்பரீட்சை - 2023 (2024)

1003

தரம் - 06 | புவியியல் | நேரம் : 2.00 மணித்தியாலம்

## பகுதி - I

01) வினா இலக்கம் 1 தொடக்கம் 5 வரை தரப்பட்ட வினாக்களுக்கு தரப்பட்ட விடையிலிருந்து பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.

1) இலங்கையில் உள்ள மாகாணங்களின் எண்ணிக்கை?
   1) 25 மாகாணங்கள் 2) 22 மாகாணங்கள்
   3) 9 மாகாணங்கள் 3) 8 மாகாணங்கள்

2) பின்வருவனவற்றில் மிகச்சிறிய நிர்வாக அலகாகக் கொள்ளக்கூடிய அலகு எது?
   1) கிராமசேவகர் பிரிவு எல்லை 2) மாகாணஎல்லை
   3) பிரதேசசெயலர்பிரிவு எல்லை 4) மாவட்ட எல்லை

3) திட்டப்படம் ஒன்றினை வரையும் போது மிகவும் முக்கியமானது எது?
   1) நிறம் 2) திசை 3) எழுத்துக்கள் 4) வரைதாள்

4) ஆபிரிக்கா கண்டத்திற்கு கிழக்கில் அமைந்துள்ள பெரியதீவு எது?
   1) கிறீன்லாந்து 2) கியூபா 3) சிசிலி 4) மடகஸ்கர்

5) வானிலை மூலகங்களில் பிரதானமானதாக அமைவது எது?
   1) மழைவீழ்ச்சி 2) ஈரப்பதன் 3) வெப்பநிலை 4) காற்று

02) வினா இலக்கம் 6 தொடக்கம் 10 வரையான வினாக்களுக்கு தரப்பட்ட கூற்றை வாசித்து சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (X) எனவும் அடையாளமிடுக.

6) வடமேல் மாகாணத்தில் மூன்று மாவட்டங்கள் உள்ளன. ( )

7) நீராவியானது ஒடுங்கல்நிலையை அடைந்ததும் முகில்கள் உருவாகும். ( )

8) பருவக்காற்றுக்களின் செல்வாக்கினால் மழை கிடைக்கிறது. ( )

9) உலகின் மிகப் பெரியதீவு கிறீன்லாந்து ஆகும். ( )

10) LED மின்குமிழைப் பயன்படுத்துவதன் மூலம் மின்சாரத்தை சிக்கனப்படுத்த முடியும். ( )



kalvi.lk

03) 11 தொடக்கம் 15 வரையான வினாக்களுக்கு "அ" பகுதியையும் "ஆ" பகுதியையும் பொருத்தமாக தொடர்புபடுத்தி இணைத்துக் காட்டுக.

| "அ" பகுதி | "ஆ" பகுதி |
|---|---|
| 11) வளிமண்டலம் | a) இடம்பெயர் பறவை |
| 12) காவியுடைக்கள்ளி | b) வரண்ட வலயம் |
| 13) பித்தளைப் பொருட்கள் | c) Atmosphere |
| 14) சோளம் | d) பௌத்தாலோகமாவத்தை |
| 15) இலங்கையின் வளிமண்டல திணைக்களம் | e) பிலிமத்தலாவ |

04) 16 தொடக்கம் 20 வரையான வினாக்களுக்கு மிகப்பொருத்தமான விடையை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து இடைவெளிகளை நிரப்புக.

16) இலங்கை உலகத்தின் மிகப்பெரிய கண்டமான ........................................... கண்டத்திற்கு உரித்தான நாடாகும். (ஆபிரிக்கா, ஆசியா, ஐரோப்பா)

17) குறைந்த விலையில் மருந்துப் பொருட்களை ........................................... மூலம் பெற்றுக்கொள்ள முடியும். (சதொச,ஒசுசலா,தக்சலா)

18) வானிலை அறிக்கையினால் ........................................... அதிக நன்மை அடைகின்றனர். (மீனவர்கள், மாணவர்கள், வைத்தியவர்கள்)

19) கடற்கரையோரப்பிரதேசங்களில் ........................................... அபாயம் நிலவுகின்றது. (வெள்ளப்பெருக்கு, சுனாமி, வரட்சி)

20) ........................................... விரிகுடா இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் அமைந்துள்ளது. (பாக்கு, மன்னார், வங்காள)

## பகுதி - II

முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

01)


தரப்பட்டுள்ள இலங்கைப்புற உருவப்படமானது மாவட்ட பிரிவுகளைக் காட்டுகிறது. இதனை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்குரிய விடைகளை உமது விடைத் தாளில் எழுதுக.

1) உங்கள் பாடசாலை அமைந்துள்ள மாவட்டத்தைக் குறிக்கும் இலக்கம் எது?
2) இலங்கையின் தலைநகரம் அமைந்துள்ள மாவட்டத்தை குறிக்கும் இலக்கம் எது?
3) இலங்கையின் பொலநறுவை மாவட்டத்தை குறிக்கும் இலக்கம் எது?
4) இலங்கையின் இயற்கைத்துறைமுகம் அமைந்துள்ள மாவட்டத்தைக் குறிக்கும் இலக்கம் எது?
5) படத்தில் 13, 17 ஆகிய இலக்கங்களை உடைய மாவட்டங்கள் அமைந்துள்ள மாகாணம் எது?
6) கிழக்கு மாகாணத்தில் ஏதாவது ஒரு மாவட்டத்தை குறிக்கும் இலக்கத்தை பெயரிடுக.
7) மாத்தறை மாவட்டத்தைக் குறிக்கும் இலக்கம் யாது?
8) இலக்கம் 16 குறிக்கும் மாவட்டம் எது?
9) உமது மாவட்டத்திற்கு அருகில் உள்ள மாவட்டத்தை குறிக்கும் இலக்கம் எது?
10) இலங்கையில் உள்ள மிகச்சிறிய மாவட்டத்தைக் குறிக்கும் இலக்கம் எது?
11) இலக்கம் 23 மற்றும் 18 ஆகியன குறிக்கும் மாவட்டங்கள் அமைந்துள்ள மாகாணங்கள் முறையே எவை?
12) இலங்கையில் பெரிய மாவட்டத்தைக் குறிக்கும் இலக்கம் எது?

**(12 x 1 = 12 புள்ளிகள்)**



kalvi.lk




02)

1) உமது பாடசாலை அமைந்துள்ள பின்வரும் நிர்வாக அலகுகளைப் பெயரிடுக.

   அ) கிராமசேவகர் பிரிவு -

   ஆ) பிரதேசசெயலர் பிரிவு -

   இ) மாவட்டம் -

   ஈ) மாகாணம் -

2) பாடசாலைச் சூழலில் காணப்படக் கூடிய வானிலை நிலைமைகள நான்கினைக் குறிப்பிடுக.

3) உமது பிரதேசத்தில் அமைந்துள்ள பொதுச்சேவை நிலையங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

**(4+4+4 = 12 புள்ளிகள்)**



kalvi.lk

03)

1) சார்பு அமைவிடம் என்றால் என்ன?
2) இலங்கையின் சார்பு அமைவை தருக.
3) இலங்கையின் அமைவிடம் கலாச்சாரத்தில் செல்வாக்குச் செலுத்திய விதங்கள் இரண்டினைத் தருக.

**(4+4+4 = 12 புள்ளிகள்)**

04)

1) நீர் பல்வேறு தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள் நான்கு தருக?
2) நீர் பற்றாக்குறையால் ஏற்படும் பிரச்சனைகள் இரண்டு தருக.
3) நீரை பாதுகாக்கும் வழிமுறைகள் இரண்டு தருக.

**(4+4+4 = 12 புள்ளிகள்)**

05)

1) வானிலை மூலக்கூறுகள் நான்கினைப் பெயரிடுக.
2) வானிலை பற்றிய தகவல்களை அறிந்து கொள்வதால் கிடைக்கக் கூடிய நன்மைகள் இரண்டு தருக.
3) பின்வரும் வானிலை மூலகங்களை அளவிடும் அலகுகளைத் தருக.
   அ) வெப்பநிலை
   ஆ) மழைவீழ்ச்சி
   இ) காற்று வீசும் திசை
   ஈ) காற்றின் வேகம்

**(4+4+4 = 12 புள்ளிகள்)**

06)

1) உமது வீட்டின் அயற்சூழலின் புவியியல் இயல்புகள் நான்கினைத் தருக.
2) தாவரங்களில் இருந்து கிடைக்கக் கூடிய நான்கு பயன்களைத் தருக.
3) பின்வரும் உயிரினங்களால் எமக்கு கிடைக்கும் நன்மைகள் எவை?
   அ) கறையான்
   ஆ) மண்புழு
   இ) செண்பகம்
   ஈ) காகம்

**(4+4+4 = 12 புள்ளிகள்)**



kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி அධ්‍යාපන Kalvi.lk

Whatsapp
075 287 1457